DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | -- |
| Preliminary Register | : **CC 301/2024** |
| Deposition of Witness for | : PW 2 |
| Name | : சீனியம்மாள் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 04.06.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 4th June 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது மைப்பாறையில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 சுகன்யா எனது மகள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 2013 ம் வருடம் நானும், எனது மகள் சுகன்யாவும் மைப்பாறை கிராமத்தில் குடியேறினோம். 31.03.2014 ம் தேதி மதியம் 2.30 மணியளவில் நாங்கள் வீட்டிற்குள் படுத்து தூங்கிக் கொண்டிருந்தபோது கதவு தட்டும் சத்தம் கேட்டது. நாங்கள் இருவரும் கதவை திறந்து பார்த்தபோது ஆஜர் எதிரி அங்கு நின்றார். அவர் எங்கள் இருவரையும்பார்த்து தேவடியா மகளே, புண்ட மவளே வாடி என்று அசிங்கமாக திட்டினார். அதன்பிறகு பக்கத்து வீட்டுக்காரர்கள் அதை பார்த்து ஆஜர் எதிரி அங்கிருந்து ஓடிவிட்டார். மறுநாள் நானும், எனது மகளும் திருவேங்கடம் காவல்நிலையத்திற்கு சென்று ஆஜர் எதிரிக்கு எதிராக புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | -- |
| Preliminary Register | : **CC 301/2024** |
| Deposition of Witness for | : PW 3 |
| Name | : போத்திராஜ் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 04.06.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 4th June 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.**

முதல்விசாரணை:

நான் தற்போது மைப்பாறையில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 சுகன்யாவை எனக்கு தெரியும். அ.சா.2 சீனியம்மாளை எனக்கு தெரியும். அவர்கள் இருவரும் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் என்பதால் எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நான் அவரை 31.03.2014ம் தேதி அ.சா.1ன் வீட்டுக்கு முன்பு வைத்து பார்த்தேன். அன்றைய தினம் மதியம் 2.30 மணியளவில் நான் காட்டிலிருந்து எனதுவீட்டிற்கு வந்து சைக்கிளை தெருவில் நிப்பாட்டிவிட்டு சாப்பிட உள்ளே செல்லும்போது தெருவில் சத்தம் கேட்டது. நான் தெருவிற்கு வந்து பார்த்தபோது அ.சா.1ன் வீட்டிலிருந்து எதிரி ஓடினார். நான் அவர் ஓடியதை பார்த்தேன். அவர் பின்னால் நான் ஓடவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை இல்லை.**